**மார்ச் – 25**

# TNPSC துளிகள்

- இந்திய முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையரான நவீன் சாவ்லா எழுதிய "Every Vote Counts" எனும் புத்தகமானது முன்னாள் குடியரசு துணைத் தலைவரான ஹமீத் அன்சாரியால் புதுடெல்லியில் வெளியிடப்பட்டது.
- சென்னையில் நடந்த போட்டியின் போது சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் மட்டையாளரான சுரேஷ் ரெய்னா IPL போட்டிகளில் 5000 ஓட்டங்களைக் கடந்த முதல் மட்டையாளராக ஆகியுள்ளார்.
- மகாராஷ்டிராவின் மும்பையில் ஹம்சஃபார் அறக்கட்டளை மூலமாக இந்தியாவின் முதல் HIV சிகிச்சை மையம் மற்றும் LGBTQ சமுதாயத்தினருக்கான முழுமையான மருத்துவ நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.
- பரோடா வங்கியானது அதன் ஊழியர்களின் குழந்தைகளுக்கான மழலையர் காப்பகம்/குழந்தைகள் பராமரிப்பு வசதியைத் தொடங்கிய முதல் இந்திய பொதுத் துறை வங்கியாக மாறியுள்ளது.
- மத்திய அரசானது 2018-19 நிதியாண்டிற்கான முதலீடுகளை 85,000 கோடி ரூபாய் அளவில் திரும்பப் பெற்று நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைத் தாண்டி உள்ளது.
    - 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 1 லட்சம் கோடி அளவில் திரும்பப் பெற்ற பிறகு இரண்டாவது முறையாக ஒரே நிதியாண்டில் அதிக முதலீடுகளை மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது.
- துபாய் கலை விழாவின் 13-வது பதிப்பானது 42 நாடுகளிலிருந்து பங்கு பெற்ற 92 சமகால மற்றும் நவீன காட்சியகங்களுடன் நடத்தப்பட்டது.
    - இதன் சிறப்பு கவன மையம் தெற்காசியா ஆகும்.

# தேசியச் செய்திகள்

## சட்டவிரோத சங்கங்களை அறிவிப்பதற்கான தீர்ப்பாயம்

- ஜம்மு & காஷ்மீரின் ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பை சட்டவிரோதமான அமைப்பாக அறிவிப்பதற்கு போதுமான காரணங்கள் உள்ளனவா என்பதனைத் தீர்மானிக்க டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதியான குப்தா தலைமையிலான தீர்ப்பாயம் ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் (Unlawful Activities (Prevention) Act-UAPA) கீழ் இந்த தீர்ப்பாயத்தினை அமைப்பதற்கான அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.
- நீதிபதி குப்தா தற்போது இந்திய மாணவர்கள் இஸ்லாமிய இயக்கத்தினை சட்டவிரோதமான சங்கமாக நீட்டிக்கப்படுவதற்கு போதுமான காரணங்கள் உள்ளதா என்பதை உறுதி செய்ய UAPA-வின் கீழ் அமைக்கப்பட்ட மற்றொரு தீர்ப்பாயத்திற்கு தலைவராக உள்ளார்.

# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய குளிர்காய்ச்சல் (இன்புளுயன்ஸா) வியூகம் 2019-2030


- உலக சுகாதார மையமானது அனைத்து நாடுகளிலும் உள்ள மக்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு 2019-2030 காலத்திற்கான உலகளாவிய இன்புளுயன்ஸா வியூகத்தினை வெளியிட்டுள்ளது.
- பருவகால காய்ச்சலைத் தடுத்தல், விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அடுத்த இன்புளுயன்ஸா பரவல்களை தடுக்க தயாரிப்புப் பணிகள் செய்தல் ஆகியவை இதன் குறிக்கோள்கள் ஆகும்.
- இந்த புதிய வியூகமானது இன்புளுயன்ஸாவிற்காக இதற்கு முன்னர் உருவாக்கப்பட்டதை விட மிகவும் விரிவான மற்றும் தொலைநோக்கு உடைய ஒரு வியூகம் ஆகும்.

### *இதன் இரண்டு முக்கிய இலக்குகள்*

- நாட்டில் நோய் கண்காணிப்பு மற்றும் பதில் எதிர்ப்பு, தடுப்பு & கட்டுப்பாடு மற்றும் ஆயத்த பணிகளுக்கான வலுவான திறன்களை உருவாக்குதல்.
    - இதனை அடைவதற்கு, தேசிய & உலகளாவிய தயார்நிலை மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட இன்புளுயன்ஸாத் திட்டத்தினை உருவாக்க வேண்டும் என ஒவ்வொரு நாட்டிற்கும் இது அழைப்பு விடுத்துள்ளது.
- அனைத்து நாடுகளுக்கும் அணுகக் கூடிய அளவில் தடுப்பு, கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சையளித்தல் ஆகியவற்றிற்கான அதிக திறன் வாய்ந்த தடுப்பூசிகள், எதிர் வைரல்கள் மற்றும் சிகிச்சை முறை போன்ற சிறந்த கருவிகளை உருவாக்குதல்.

## உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதி செய்யும் நாடு

- உலக ஆயுதச் சந்தையில் ஆயுத இறக்குமதி செய்யும் மிகப்பெரிய நாடாக சவுதி அரேபியா மாறியுள்ளது.
- எட்டு ஆண்டுகள் தொடர்ந்து முதலிடத்தில் இருந்த இந்தியாவானது இரண்டாவது இடத்திற்கு இறங்கியுள்ளது.
- இது ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த சிந்தனைச் சாவடியான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) சர்வதேச ஆயுத பரிமாற்றப் போக்கு - 2018 எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட வருடாந்திர அறிக்கையின் அடிப்படையிலானது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## டின்ஏவிற்குள் (DNA) டிஜிட்டல் தகவல்கள்

- மைக்ரோசாப்ட் மற்றும் வாஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஒரு முழுமையான முற்றுப் பெறும் தானியங்கு டிஎன்ஏ சேமிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.
- இந்த சாதனத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் தகவல்களை டிஎன்ஏவிற்குள் மொழிபெயர்த்து மீண்டும் பிட் வடிவத்திற்கு மாற்ற முடியும்.
- இந்த அமைப்பில் பயன்படுத்தப்படும் மென்பொருளானது டிஜிட்டல் தரவுகளின் 1 மற்றும் 0 வடிவங்களை டிஎன்ஏ வரிசைக்கு மாற்றி திரவமாக சேமிக்கின்றது.


## சிக்சா வாணி செயலி

- மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது இணைய வாயிலாக பயன்படுத்தக் கூடிய சிக்சாவானி எனும் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது சரியான நேரத்தில் மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு முக்கியமான தகவல்களைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இதன் முதல் கட்டமாக 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அரசுத் தேர்வுகளின் மதிப்பீட்டு செயல்பாடானது இந்த தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.




## இமுல்யா தளம்

- தொடர் சங்கிலி அடிப்படையிலான மென்பொருள் நிறுவனமான இன்பெய்ன் ஃபின்டெக், இமுல்யா எனும் தளத்தினை 2019 டிசம்பரில் அறிமுகப்படுத்தவுள்ளது.
- இது இந்தியாவில் உள்ள வங்கியல்லாத நிதியளிக்கும் நிறுவனங்களுக்கு திறன் வாய்ந்த, பாதுகாப்பான மற்றும் நம்பகமான சொத்து பாதுகாப்புப் பரிவர்த்தனை நடவடிக்கைகளுக்கு உதவும் அறிவார்ந்த தொடர் சங்கிலி அமைப்பாகும்.
- இந்த இமுல்யாவானது அங்கீகாரம் பெற்ற கடன்கள் மற்றும் சொத்துத் தரவுகளை இணைய தளத்தில் இணைக்கவும் முழுமையான நம்பிக்கை மற்றும் வெளிப்படைத் தன்மையில் முதலீட்டாளர்கள், மூலதாரர்கள், வழங்குநர்கள், மதிப்பீட்டு முகவர்கள் மற்றும் சேவைகள் ஆகியோர் பாதுகாப்பான ஒரு சுழற்சியை நிர்வகிக்கவும் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துகிறது.




## ஸ்மார்ட் ஆயுத பரிசோதனை

- பாகிஸ்தானின் விமானப் படையானது தனது JF-17 தண்டர் போர் விமானத்திலிருந்து (JF-17 Thunder fighter jet) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஸ்மார்ட் ஆயுதத்தினை வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.
- இது பகல் மற்றும் இரவு நேரங்களில் மிகவும் துல்லியத் தன்மையுடன் பல்வேறு


இலக்குகளின் மீது பயன்படுத்தப்படும் திறனை வழங்குகின்றது.

- ஆயுதம் தயாரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றில் முழுவதும் உள்நாட்டு முயற்சிகளின் மூலமாகவே இந்த தகுதியை அடைந்துள்ள பாகிஸ்தானின் இந்த சோதனையானது ஒரு மிகப் பெரிய மைல்கல்லாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## முக்கிய தளங்களில் உள்ள பாதிக்கப்பட்ட இனங்கள்

- சர்வதேச உயிரியல் அறிவியலுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிக்கையான PLOS உயிரியல் என்ற பத்திரிக்கையால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய ஆய்வின்படி, 84% புவிப் பரப்பின் மீது உள்ள உயிரினங்களின் மீது மனிதரால் பாதிப்புகள் நிகழ்கின்றன.
- இந்தியாவானது இத்தகைய தாக்கங்களில் சராசரியாக 35 உயிரின வகைகளின் மீது பாதிப்பை ஏற்படுத்தி 16-வது இடத்தில் உள்ளது.
- மலேசியாவானது அதிக அளவில் பாதிக்கப்பட்ட இனங்களுடன் (125) முதலிடத்தில் உள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## காமன்வெல்த் இளையோர் விருது

- தமிழ்நாட்டின் சமூக தொழில் முனைவோர் ஒருவர் தனது தொழில் நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட உணவு மீட்பு அமைப்புக்காக ஆசிய பிராந்தியத்திற்கான காமன் வெல்த் இளையோர் விருதினைப் பெற்றுள்ளார்.


- நோ ஃபுட் வேஸ்ட் (No Food Waste) எனும் அமைப்பின் நிறுவனரான பத்மநாபன் கோபாலன் லண்டனில் உள்ள காமன்வெல்த் செயலகத்தில் இந்த விருதினைப் பெற்றார்.
- இவர் மிதமிஞ்சிய உணவுகளை ஓரிடத்திலிருந்துப் பெற்று தேவைப்படுவோர்க்கு வழங்குவதற்கான தனது புத்தாக்க பணியின் மூலம் ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி இலக்கான பட்டினியின்மையை அடைய மேற்கொண்ட பணிக்காக அவருக்கு இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டது.




# முக்கிய தினங்கள்

## உலக காசநோய் தினம் – மார்ச் 24


- உலக காசநோய் தினமானது ஒவ்வொரு வருடமும் மார்ச் 24 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இது உலகளாவிய தொற்று நோயான காசநோய் குறித்த பொது விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நோயை அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.



- இந்த தினமானது 1882 ஆம் ஆண்டு டாக்டர் ராபர்ட் கோச் காசநோய்க்கு காரணமான TB பாசில்லஸை கண்டறிந்ததாக அறிவித்த தினத்தை நினைவு கூறுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு காசநோய் தினத்திற்கான கருத்துருவானது, "இதுவே நேரம்" என்பதாகும்.
- 2019 ஆம் ஆண்டு காசநோய் தினத்தை முன்னிட்டு உலக சுகாதார நிறுவனமானது உலகளாவிய நிதியம் மற்றும் ஸ்டாப் டிபி கூட்டிணைவுடன் இணைந்து "அனைவரையும் கண்டுபிடி, சிகிச்சையளி. TBயை ஒழி" (Find. Treat. All. #EndTB) எனும் கூட்டு முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது.

## அட்லாண்டிக் கடல் பகுதியின் அடிமைகள் வர்த்தகம் மற்றும் அடிமைத் தனத்தினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்வதற்கான சர்வதேச தினம் – 25 மார்ச்

- அட்லாண்டிக் கடல் பகுதியின் அடிமைகள் வர்த்தகம் மற்றும் அடிமைத் தனத்தினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறுவதற்கான சர்வதேச தினமானது ஐ.நா.வால் 2007ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 25 ஆம் நாள் கடைபிடிக்கப்படுகின்றது.




- இந்த தினமானது அட்லாண்டிக் கடல் பகுதியில் அடிமைகள் முறையால் பாதிக்கப்பட்ட மற்றும் இறந்தவர்களைப் பெருமைப்படுத்துவதற்காகவும் நினைவு கூறுவதற்காகவும் கடைபிடிக்கப்படுகின்றது.
- இந்த தினமானது முதன்முதலில் 2008 ஆம் ஆண்டு "அமைதியை முறித்து, நாம் மறந்து விடுவோம்" எனும் கருத்துருவுடன் அனுசரிக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் கருத்துருவானது, "அடிமைத்தனத்தை நினைவு கூர்வோம், அது நீதிக்கான கலையின் சக்தி" என்பதாகும்.

## கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன உறுப்பினர்களுடன் ஒன்றிணைவதற்கான சர்வதேச தினம் – மார்ச் 25

- கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன உறுப்பினர்களுடன் ஒன்றிணைவதற்கான சர்வதேச தினமானது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 25 ஆம் நாள் ஐ.நா. சபையால் அனுசரிக்கப்படுகிறது.




- இத்தினமானது, பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் பணிகள் முகமையில் பணியாற்றிய முன்னாள் பத்திரிக்கையாளரான அலெக் கொலெட் 1985 ஆம் ஆண்டு ஆயுதம் ஏந்திய மற்றும் துப்பாக்கி கொண்ட மனிதர்களால் கடத்தப்பட்டதை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப்படுகின்றது.
- அரசு சாரா நிறுவன சமூகம் மற்றும் பத்திரிக்கைத் துறையில் ஐ.நா. ஊழியர்கள் மற்றும் அமைதி காப்பாளர்களையும் அவர்களது சக நண்பர்களையும் பாதுகாத்திட நமது நடவடிக்கைகளை ஒன்று திரட்டுதல், நீதி கோருதல் மற்றும் உறுதியை வலுப்படுத்தலுக்கான ஒரு தினம் இதுவாகும்.

---------------